**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.,B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 07-ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**சுருக்கு பட்டிகை வழக்கு எண்.468/2016**
**(CNR.NO: TNRM05-000377-2016)**

1. காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் : அரசுக்காக,
சிறப்பு சார்பு ஆய்வாளர்,
இராமேஸ்வரம் கோவில் காவல் நிலையம்,
குற்ற எண்.26/2014

1 முதல் 3, 8, 9, 11 ஆகிய எதிரிகளின் வழக்கு குற்றப் பல்வகை மனு எண்.2072/2022, நாள்.26.08.2022 உத்தரவின் அடிப்படையில் சுருக்கு வழக்கு எண்.878/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**4 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | CSF சந்தோஷ் |
| 3. | க/பெ | : | ஜேவிஜில் சாஸ் பெர்னாண்டோ |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சல்லிமலை, இராமேஸ்வரம், |
| 6. | வயது | : | 42/2014 |

**5 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சிதம்பரம் |
| 3. | க/பெ | : | ராமையா |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | மார்க்கெட் தெரு, இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | 48/2014 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:13:36 +0530

**6 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | ஜஸ்டின் |
| 3. | க/பெ | : | ராயப்பன் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | வலசை தெரு, தங்கச்சிமடம். |
| 6. | வயது | : | 47/2014 |

**7 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | மகத்துவம் |
| 3. | க/பெ | : | அந்தோணிச்சாமி |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சவேரியார் நகர், தங்கச்சிமடம். |
| 6. | வயது | : | 62/2014 |

**10 வது எதிரியின் விபரம் (குற்றமற்று விட்டது)**

| | | | |
|---|---|---|---|
| 2.(j) | பெயர் | : | T.K.மணி |
| 3. | க/பெ | : | கருப்பையா |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | மார்க்கெட் தெரு, இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | 42/2014 |

---

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 02.03.2014-ம் தேதி 10.00 மணி |
| 8. | புகார் தேதி | : | 02.03.2014-ம் தேதி 12.00 மணி |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | கைது செய்யப்படவில்லை. |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | கைது செய்யப்படவில்லை. |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 09.08.2016 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:13:44 +0530

| | | | |
|---|---|---|---|
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 02.02.2023 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.06.2026. |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1 முதல் 11 எதிரிகள் மீது பிரிவுகள் 143, 341, 188, 353 இதச படி. |
| 15. | வினவப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 4 முதல் 7 மற்றும் 10 வது எதிரிகள் மீது பிரிவுகள் 143, 341, 188, 353 இதச படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | எதிரிகள் மீது பிறப்பிக்கப்பட்ட பிடிக்கட்டளை உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை / எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |

| முதல் விசாரணை | எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |
|---|---|
| அ.சா.1 – 11.10.2022 | அ.சா.1 – 11.10.2022 |
| அ.சா.2 – 01.11.2022 | அ.சா.2 – 25.06.2024 |
| அ.சா.3 – 01.11.2022 | அ.சா.3 – 02.02.2024 |
| அ.சா.4 – 11.11.2022 | அ.சா.4 – 21.08.2024 |
| அ.சா.5 – 27.12.2022 | அ.சா.5 – 11.03.2026 |
| அ.சா.6 – 11.01.2023 | அ.சா.6 – 09.06.2026 |

| | | | |
|---|---|---|---|
| 18. | எதிரியிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 19.06.2026. |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையீடுனர் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | i) 4 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.481/2022 ஆக கோப்பிற்கு |

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.07.07 15:13:51 +0530

எடுக்கப்பட்டு 28.02.2022 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ii) 5 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.7036/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.12.2017 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

iii) 6 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.3097/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 19.11.2018 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

iv) 5 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.3487/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.12.2018 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

v) 6 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.978/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.03.2022 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

vi) 10 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.1002/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.03.2022 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.07.07 15:13:58 +0530

Vii) 5 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.5249/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.10.2022 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

Viii) 4, 5 வது எதிரிகள் தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.3946/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 14.07.2023 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ix)10 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.3780/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.07.2023 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

x) 7 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.3949/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 14.07.2023 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

xi) 7 வது எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற M.P.No.20/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 15.12.2025 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

23. அரசு தரப்பு வழக்கறிஞர் : திரு. மணி சங்கர்

24. எதிரி தரப்பு வழக்கறிஞர் : திரு.R. ஜோதிமுருகன்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:06 +0530

| | | | |
|---|---|---|---|
| 25. | எதிரியின் கூற்று | : | 4 முதல் 7 எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 07.07.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 07.07.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக, 10ம் எதிரி மீதான குற்றமற்றுவிட்டது. 4 முதல் 7 குற்றம்சாட்டப்பட்டவர்கள் பிரிவுகள் 143, 188, 341, 353 இதச படி குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 255(1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர்கள் எழுதி கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.** |

இவ்வழக்கின் தாய் வழக்கு கடந்த 09.08.2016 ம் தேதியன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (இனி கீழ் வரும் இடங்களில் **குவிமுச** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி 1 முதல் 11 எதிரிகள் மீது STC.No.468/2016 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கிலிருந்து 1 முதல் 3, 8, 9, 11 எதிரிகளின் வழக்கானது STC.No.878/2022 என தனியாக பிரிக்கப்பட்டு இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 20.04.2023 ம் தேதியன்று விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. STC.No.468/2016 தாய் வழக்கில் 4 முதல் 7, 10 எதிரிகளின் மீது பிறப்பிக்கப்பட்ட பிடியாணை நிறைவேற்றப்படாத காரணத்தினால் நிலுவையில் இருந்து வந்து இந்நீதிமன்றத்தின் முன்பு 07.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:13 +0530

ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. ஜோதிமுருகன் அவர்கள் ஆஜராகியும்,விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

1.**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

கடந்த 02.03.2014 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு இராமேஸ்வரம் to தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் NSK வீதியில் உள்ள தேவர் சிலை முன்பாக ரோட்டில் 1 முதல் 11 வரை உள்ள எதிரிகள் ஜெட்டி கடற்கரையில் விசைப்படகு மீனவர்கள் இரட்டை மடி வலை மீன் பிடிப்பதை கண்டித்து நாட்டு படகு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து மேற்படி விசைப்படகு உரிமையாளர்களான 1 முதல் 11 எதிரிகள் 30(2) காவல் சட்டம் அமுலில் இருப்பது தெரிந்தும் மேற்படி எதிரியானவர்கள் சட்டம் விரோதமாக ஒன்று கூடி பொது மக்களுக்கும், போக்கு வரத்திற்கும் இடையூறாக பாதையை மறித்து மேற்படி இடத்தில் பணியில் இருந்த காவல் ஆளினர்களை பொது அலுவல் செய்யவிடாமல் தடுத்து குற்றம் புரிந்ததாக 1 முதல் 11 எதிரிகள் மீது பிரிவுகள் 143, 341, 188, 353 இதச படி இராமேஸ்வரம் கோவில் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 4 முதல் 7 மற்றும் 10 வது எதிரிகள் ஆஜரானவுடன் பிரிவு 204 குற்றவியல் நடைமுறைச்சட்டம், 1973 (இனி கீழ் வரும் இடங்களில் '**குவிமுச**' என்று குறிப்பிடப்படும்) கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:21 +0530

3. இவ்வழக்கில் 4 முதல் 7, 10 குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு இந்த நீதிமன்றம் பிரிவு 251 குவிமுச படி குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது 02.02.2023 ம் தேதியன்று பிரிவுகள் 147, 341, 188, 353 இதச படி குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2, அ.சா.3 கண்ணுற்ற சாட்சிகள், அ.சா.4 பார்வை மகஜர் சாட்சி, அ.சா.5, அ.சா.6 புலன்விசாரணை அதிகாரிகள். இவ்வழக்கின் 10 ம் எதிரி இறந்துவிட்டதாக இறப்புச் சான்றிதழ் 04.02.2026 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 10 ம் எதிரி மீது குற்றமற்றுவிட்டதாக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>

i) கடந்த 02.03.2014–ம் தேதி காலை 10 மணியளவில் இராமேஸ்வரம் கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக அ.சா.1 நடராஜன் பணியில் இருந்தபோது அன்று காலை 10 மணியளவில் இராமேஸ்வரம் துறைமுகத்தில் விசைபடகு மீனவர்கள் இரட்டைமடி வலை கொண்டு மீன்பிடித்து வந்ததற்கு நாட்டு படகு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் சம்பந்தமாக அ.சா.1 நடராஜன் மற்றும் அ.சா.2 சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமசந்திரன், அ.சா.3 சிறப்பு சார்பு ஆய்வாளர் பொந்துமுனியாண்டி ஆகியோர் மற்றும் காவலர்களுடன் பாதுகாப்பு பணியில் இருந்ததாகவும், அப்போது இராமேஸ்வரம் தேவர் சிலை அருகில் விசைபடகு மீனவர் சங்க தலைவர் ஜேசுராஜா தலைமையில் சுமார் 160 நபர்கள் இராமேஸ்வரம் முதல் தனுஷ்கோடி வரையிலான தேசிய நெடுஞ்சாலையில்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:28 +0530

பொதுமக்கள் மற்றம் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் 30(2) போலீஸ் சட்டம் அமலில் இருப்பது தெரிந்தும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், இடையுறு செய்தவர்களை அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் எச்சரித்தும் கேட்காததால் மேற்படி நபர்கள் மீது காவல் நிலையத்தில் அ.சா.1 நடராஜன் அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்துள்ளார்.

ii) அன்றைய தினமான 02.03.2014–ம் தேதி இராமேஸ்வரம் கோவில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் அ.சா.5 ஞானராஜ் இருந்தபோது சுமார் 12.00 மணிக்கு திரு.நடராஜன் சிறப்பு சார்பு ஆய்வாளர் கோவில் காவல் நிலையம் அவர்கள் கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண்.26/2014 பிரிவுகள் 143, 341, 188, 353 ஆக அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

iii) பின்னர் அன்றைய தினம் சுமார் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கதிரேசன் மற்றும் அ.சா.4 மகேஷ் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.5 பார்வை மகஜர் தயார் செய்து, பின்னர் சம்பவ சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.4 மகேஷ், கதிரேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கில் 11 எதிரிகளை நிறுத்தி மற்ற எதிரிகளை நீக்கம் செய்து அ.சா.ஆ.6 நீக்கலறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னர் பணிமாறுதலாகி சென்றதால் வழக்கின் கோப்பை அ.சா.6 மகேஸ்வரி என்பவர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது சாட்சிகள் ஆய்வாளர் ஞானராசிடம் சொன்னதையே அவரிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யாமல் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 143, 341, 188, 353 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:36 +0530

**Questioning U/s.313(i)(b) Crpc**

7. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து 4 முதல் 7 வரையான குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக உள்ளவை குறித்து பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

**Point for determination**

**8. இந்நிலையில், 4 முதல் 7 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 341, 188, 353 இதச படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

**Appreciation of Evidence**

9. வழக்கு சம்பவம் குறித்து அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் தங்களது முதல்விசாரணையில் சுமார் 160 நபர்கள் தேசிய நெடுஞ்சாலையில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பிரிவு.30(2) போலீஸ் காவல் சட்டம் அமலில் இருப்பது தெரிந்தும் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இடையூறு செய்ததால் அ.சா.1 ஆல் புகார் மனு கொடுக்கப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள்.

10. இதுகுறித்து எதிரிகள் சட்டவிரோதக் கூட்டமாக ஒன்று கூடினார்களா என்பது குறித்தும், பிரிவு 30(2) காவல் சட்டம் அமலில் இருந்ததா என்பது குறித்தும் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:44 +0530

11. பொதுவாக பிரிவு 141 இதசவின் கீழான சட்டவிரோத கூட்டத்தில் ஒருவர் உறுப்பினராக இருக்கும்போது அது பிரிவு 143 இதசவின் கீழ் தண்டிக்கத்தக்கது ஆகிறது. பிரிவு 141 இதசவின் கீழான ஆக்கூறுகளை ஆராய்கையில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அந்த பிரிவில் குறிப்பிடப்பட்ட ஐந்து கூறுகளில் ஒன்றை பொது நோக்கமாக கொண்டு செயல்பட்டிருக்கும் பட்சத்தில் அது சட்டவிரோத கூட்டம் என்பதாகிறது.

12. எனவே, சட்ட விரோத கூட்டமாகுவதற்கு முதலில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இருக்க வேண்டும். அவர்களுக்கிடையே, சட்டவிரோதமாக கூடுவது பொது நோக்கமாக இருந்திருக்க வேண்டும். கட்டாயமாக அந்த நோக்கம் சட்டவிரோதமாக இருந்திருக்க வேண்டும். அந்த சட்டவிரோத பொதுவான நோக்கம் பற்றி கூட்டத்திலுள்ள அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட ஐந்து நோக்கங்கள் என்பது முதலாவது மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது பொது பணியாளரின் சட்டப்பூர்வமான அதிகாரத்தை குற்றமுறு நோக்கத்துடன் தடுப்பது. இரண்டாவது சட்டத்தின்படியான நடைமுறைகளை நிறைவேற்றுவதை தடுப்பது. மூன்றாவது குற்றமுறு அத்துமீறல் அல்லது வன்குறும்பு ஆகியவற்றை புரிவது. நான்காவது குற்றமுறு பலப்பிரயோகம் மூலமாக நீரின் பயன்பாடு அல்லது பாதையை அனுபவிக்கும் உரிமையை தடுப்பது. ஐந்தாவது சட்டப்படி செய்யக்கூடிய உரிமையை செய்யாமல் விட்டுவிடுதற்கு கட்டாயப்படுத்துவது ஆகியவற்றில் ஒன்றினை பொதுநோக்கமாக கொண்டிருக்கவேண்டும்.

13. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையானவர்களின் சாட்சிகள் மூலம் விசைப்படகு மீனவர்கள் இரட்டை மடி வலையை பயன்படுத்தி மீன்பிடிக்கக் கூடாது என்பதே கூட்டத்தின் நோக்கமாக இருந்துள்ளது தெரிய வருகிறது. அதில் சட்டவிரோதமான நோக்கத்துடன் கூடியதை தீர்மானிக்கும் வகையில் எவ்வித நோக்கமும் அமையவில்லை. அது மேற்சொன்ன பிரிவு 141 இதசவில் குறிப்பிடப்பட்ட

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:51 +0530

ஐந்து உள்ளடக்கங்களில் எவற்றையும் குறிப்பிடும் வகையில் அமையவில்லை என்பதும், அதன் மூலமாக அது சட்டவிரோத பொது நோக்கத்துடன் அமைந்ததாகவும், அரசுத்தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மூலமாக இந்நீதிமன்றத்திற்கு தெரியவரவில்லை. எனவே 4 முதல் 7 எதிரிகள் இராமேஸ்வரம் தேவர் சிலை முன்பாக சட்டவிரோத கூட்டமாக கூடியதாக கருத இயலாது. எனவே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச பிரிவு 143ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 188 குற்றம் குறித்து பரிசீலனை செய்கையில், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இதச பிரிவு 188ன் கீழ் குற்றம் பதிவு செய்வதற்கு வட்டாட்சியர் போன்ற பொது ஊழியர்கள் எழுத்து மூலமாக புகார் கொடுக்க வேண்டும். அதன்பின்புதான், அந்த வழக்கு பதிவு செய்து அதனை நீதிமன்றம் புலன்கொள்ள இயலும். ஆனால், இந்த வழக்கில் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் ஆவார் வழக்கு சம்பவம் குறித்து எழுத்து மூலமாக நீதிமன்றத்தில் அவர் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என ஆட்சேபித்தார்.

15. இந்நிலையில் இதுசம்பந்தமாக இந்த நீதிமன்றம், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **Jeevanandham Vs. State rep. by Inspector of Police 2018(2) L.W. (Crl.) 606.** என்ற வழக்கில் கீழ்கண்டவாறு வழிமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளது.

> ".In view of the discussions, the following guidelines are issued insofar as an offence under Section 188 of IPC, is concerned:

a) A Police Officer cannot register an FIR for any of the offences falling under Section 172 to 188 of IPC.

b) A Police Officer by virtue of the powers conferred under Section 41 of Cr.P.C will have the authority to take action under Section 41 of Cr.P.C., Crl.O.P.(MD).Nos.7922 of 2019, etc., batch

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:14:59 +0530

when a cognizable offence under Section 188 IPC is committed in his presence or where such action is required, to prevent such person from committing an offence under Section 188 of IPC.

c) The role of the Police Officer will be confined only to the preventive action as stipulated under Section 41 of Cr.P.C and immediately thereafter, he has to inform about the same to the public servant concerned/authorised, to enable such public servant to give a complaint in writing before the jurisdictional Magistrate, who shall take cognizance of such complaint on being prima facie satisfied with the requirements of Section 188 of IPC.

d) In order to attract the provisions of Section 188 of IPC, the written complaint of the public servant concerned should reflect the following ingredients namely;

i) that there must be an order promulgated by the public servant;

ii) that such public servant is lawfully empowered to promulgate it;

iii) that the person with knowledge of such order and being directed by such order to abstain from doing certain act or to take certain order with certain property in his possession and under his management, has disobeyed; and

iv)that such disobedience causes or tends to cause;

(a) obstruction,annoyance or risk of it to any person lawfully employed ; or

(b) danger to human life, health or safety; or

(c) a riot or affray.

e) The promulgation issued under Section 30(2) of the Police Act, 1861, must satisfy the test of reasonableness and can only be in the nature of a regulatory power and not a blanket power to trifle any democratic dissent of the citizens by the Police.

f) The promulgation through which, the order is made known must be by something done openly and in public and private information will not be a promulgation. The order must be notified or published by beat of drum or in a Gazette or published in a newspaper with a wide circulation.

g) No Judicial Magistrate should take cognizance of a Final Report when it reflects an offence

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:15:06 +0530

under Section 172 to 188 of IPC. An FIR or a Final Report will not become void ab initio insofar as offences other than Section 172 to 188 of IPC and a Final Report can be taken cognizance by the Magistrate insofar as offences not covered under Section 195(1)(a)(i) of Cr.P.C.

h) The Director General of Police, Chennai and Inspector General of the various Zones are directed to immediately formulate a process by specifically empowering public servants dealing with for an offence under Section 188 of IPC to ensure that there is no delay in filing a written complaint by the public servants concerned under Section 195(1) (a)(i) of Cr.P.C"

16. எனவே, இதச பிரிவு 188 ன் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டுமெனில் பொது அலுவலர் எழுத்து மூலமான புகார் கொடுக்க வேண்டும். அதாவது அந்த பொது அலுவலரால் ஏதேனும் உத்தரவு பிரகடனப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அந்த உத்தரவினை பிரகடனப்படுத்துவதற்கு பொது அலுவலருக்கு சட்டப்படியான அதிகாரம் இருக்க வேண்டும்.

17. மேற்சொன்ன வழிமுறைகளை இவ்வழக்கில் சாட்சியங்களுடன் பொறுத்தி ஆராய்கையில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் தங்களது குறுக்கு விசாரணையின் போது வட்டாட்சியர் தான் பிரிவு 188 இதசவின் கீழான குற்றத்திற்கு புகார் கொடுக்கவேண்டுமென்பது தெரியும் என்றும், அதுபோன்ற நடைமுறைகள் இவ்வழக்கில் பின்பற்றப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே பிரிவு 188 இதசவின் கீழான குற்றச்சாட்டு தொடர்பாக தகுந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பது அரசுத்தப்பில் சந்தேகத்திற்கிடமின்றி முன்னிடப்படவில்லை.

18. மேலும் அ.சா.1 நடராஜன், அ.சா.5 ஞானராஜ் மற்றும் அ.சா.6 மகேஸ்வரி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் பிரிவு 30(2) காவல் சட்டம் பற்றி பொது மக்களுக்கு தண்டோரா போடப்பட்டு பொது அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வாறான பிரிவு 30(2) காவல் சட்டத்தின் கீழான

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:15:14 +0530

அறிவிப்புகள் எதுவும் இவ்வழக்கில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். அ.சா.6 மகேஸ்வரி தனது குறுக்கு விசாரணையில் பிரிவு.30(2) காவல் சட்டம் மாவட்ட ஆட்சியரால் எந்த காலகட்டத்தில் அமலில் இருக்கும் என்ற உத்தரவு நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், நோட்டீஸ் ஒட்டியிருக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டதாகவும், ஆனால் ஆவணமாக சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்சொன்ன சாட்சியங்கள் மூலமாக அரசுத்தப்பில் பிரிவு 30(2) காவல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டப்படி இராமேஸ்வரம் NSK வீதியிலுள்ள தேவர் சிலை முன்பாக கூட்டம் கூடுவதற்கு முன்அனுமதி பெறவேண்டுமென்று அறிவிப்புகள் எதுவும் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களால் வெளியிடப்பட்டதாக அரசுத்தப்பில் எவ்வித ஆவணங்களும் முன்னிடப்படவில்லை. அவ்வாறான வழிமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமலும், சம்பவ இடமான இராமேஸ்வரம் NSK வீதியிலுள்ள தேவர் சிலை தடைசெய்யப்பட்ட பகுதி என்று பொது உத்தரவு பிரகடனப்படுத்தப்படாத நிலையில் 4 முதல் 7 எதிரிகள் பிரிவு 30(2) காவல் சட்டத்தின் கீழ் அமலில் இருந்ததாக சொல்லலப்படும் உத்தரவை மீறியதாகவும் அதன் மூலம் பிரிவு 32 காவல் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது.

19. மேலும், மேற்சொன்ன முன்தீர்ப்பில் பிரிவு 30(2) காவல் சட்டம்,1861 உத்தரவு மீறப்படும் காரணத்தினால் பிரிவு 143 இதசவின் கீழான குற்றச்சாட்டு நடைபெற்றதாக தீர்மானிக்க இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் மேற்சொன்ன காரணங்களால் 4 முதல் 7 எதிர்கள் சட்டவிரோதமாக பொதுவான நோக்கத்துடன் ஒன்று கூடியதாக தீர்மானிக்க இயலாத நிலையில் பிரிவு 30(2) காவல் சட்டம்,1861 கீழ் மீறப்பட்டதாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. எனவே, அரசு தரப்பில் மேற்படி முன் தீர்ப்பில் சொல்லப்பட்ட உரிய நடைமுறைகளை பின்பற்றி இந்த வழக்கு பதிவு செய்யாததால் இதச பிரிவு 188ன் கீழான குற்றம் குறித்து குற்றம்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:15:22 +0530

சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பதிவு செய்யபட்டதை தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரிவு.341 இதசவின் கீழான குற்றச்சாட்டைக் குறித்து ஆராய்கையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியங்களில் தேசிய நெடுஞ்சாலையில் மறித்ததாக சொல்லியுள்ள நிலையிலும், சம்பவ இடத்தில் சுமார் 500 நபர்கள் கூடியதாக அ.சா.5 ஞானராஜ் மற்றும் அ.சா.6 மகேஸ்வரி ஆகியோர்கள் சாட்சியமளித்துள்ள நிலையிலும், பொது நபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சிகளாகவோ அல்லது இடையூறு ஏற்பட்டதாகவோ நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே, எதிரிகள் சட்டவிரோதமாக தடுத்ததாக சொல்லப்படும் நிகழ்வானது தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லையென்று தீர்மானித்து பிரிவு.341 இதசவின் கீழ் குற்றம்புரியவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. மேலும், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் பொதுப்பணியில் இருந்த போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் அவர்களை பணி செய்யவிடாமல் குற்றமுறு வன்முறையை உபயோகித்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அதேபோல் 4 முதல் 7 வரையானவர்கள் தனித்தனியாக எந்தவிதமான குற்றமுறு வன்முறை புரிந்தார்கள் என்பது குறித்தும், அவ்வாறான வன்முறை மூலமாக அவர்களது பொதுப்பணியை செய்யவிடாமல் தடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை. எனவே, குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களுக்கு உடலளவில் காயத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்களது பொது அலுவலை தடுத்து நிறுத்தும் வகையில் குற்றமுறு வன்முறையில் ஈடுபட்டதாக நிரூபிக்கும்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:15:29 +0530

வகையில் அரசுத்தரப்பில் சாட்சியங்கள் அமையப்பெறவில்லை என்று தீர்மானித்து பிரிவு 353 இதசவின் கீழ் குற்றம்புரியவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. முடிவாக, 10ம் எதிரி மீதான குற்றமற்றுவிட்டது. 4 முதல் 7 குற்றம்சாட்டப்பட்டவர்கள் பிரிவுகள் 143, 188, 341, 353 இதச படி குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 255(1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

23. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

24. குற்றம்சாட்டப்பட்டவர்கள் எழுதி கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 07ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:15:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – நடராஜன்

அ.சா.2 – இராமச்சந்திரன்

அ.சா.3 – பொந்து முனியாண்டி

TNRM050003772016



| | | |
|---|---|---|
| அ.சா.4 | – | மகேஷ்ராஜா |
| அ.சா.5 | – | ஞானராஜ் |
| அ.சா.6 | – | மகேஸ்வரி |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 02.03.2014 | புகார் மனு |
| 2. | அ.சா.ஆ.2 | 02.03.2014 | பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | 02.03.2014 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | 02.03.2014 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ.5 | 02.03.2014 | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | 02.03.2014 | எதிரிகள் நீக்கம் அறிக்கை |

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

இல்லை

**சான்றுப்பொருள்:**

இல்லை

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.07 15:15:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.